29.08.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை. (அ.வ..எண்.155/2021) திரு.பாலமுருகன்.

<u>குறுக்கு விசாரணை –</u>

நான் எனது தகப்பனாரை பிரிந்து எத்தனை வருடங்களாக இருக்கிறேன் என்றால் 15 வருடங்கள் இருக்கும், எனக்கு திருமணம் எனது தகப்பனார் தான் செய்து வந்தார் என்றால் சரிதான். வழக்கில் 4 முதல் 8 பிரதிவாதிகளான சகோதர சகோதரிகளுக்கு எனது தகப்பனார் தான் திருமணம் முடித்து வைத்தார் என்றால் சரிதான். எனது அப்பா 2021 ல் நஞ்சை,புஞ்சை போன்றவைகள் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 3 செண்டுள்ள வீட்டு மனை, 1 ஏக்கர் 80 செண்டு காடும் எழுதிக்கொடுத்துள்ளார். எனக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்தது போன்ற மற்ற சகோதர சகோதரிகளுக்கும் சமமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எழுதிக்கொடுத்துள்ளார் ஆனால் சமமாக எழுதிக்கொடுக்கவில்லை. எனது அப்பாவுக்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது,எனது தாத்தாவின் பேரில் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றுதெரியுமா என்றால் நிலம் உள்ளது ஆனால் எத்தனை ஏக்கர் உள்ளது என்றுதெரியாது.எனது தாத்தாவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பேர்கள்.அவர்களுக்கு பாகம்பிரித்துவிட்டார்களா என்றால் இல்லை பொதுவாகத்தான் உள்ளது. எனது அப்பாவின் பேரில் பூர்வீகச்சொத்திற்கு எவ்வாறுபட்டா ஏற்பட்டது என்றால் எனது அப்பாவின்பேருக்கு பூர்வீகச்சொத்தில் பட்டா ஏற்படவில்லை. எனது அப்பாவின்பேரில் உள்ள பட்டாநிலம் சுயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் கண்ட சொத்துக்கள் எனது அப்பாவுக்கு சயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மற்ற சகோதரர்களுக்கும் சொத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால்

எழுதிக்கொடுக்கப்பதற்கு முன்பாகவே நான் வழக்கு தாக்கல் செய்து விட்டேன். வழக்கு 15.09.2021 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது சகோததரர்களாக 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் 20.10.2020, 28.06.2021 ஆகிய தேதிகளில் சொத்துக்களைப் பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞர் என அப்பா என்உடன்பிறந்த சகோதரர்களுக்கு 30.06.2021 ம்தேதியிட்டு வா.சா.ஆ.3 அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதனால் எனது அப்பா குடும்ப ஏற்பாட்டின்படி எனக்கும், எனதுசகோதரர்களுக்கும் அவரின் பராமரிப்பில் இருந்த சொத்துக்களை சமமாக பிரித்து எழுதிக்கொடுத்துள்ளார் அதை ஏற்றுக்கொள்ளாமல் அதிக நிலம் பெறவேண்டி கெட்ட எண்ணத்துடன் இந்த வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் சொத்தை பொறுத்துபிரிக்கப்படாமல் அவரது வாரீசுகளான பெரியப்பா,சித்தப்பா ஆகியோர்கள் கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம். எனதுதாத்தாவின் சொத்தில் போன வருடம் என்ன பயிர் செய்து விளைவித்து அதில் எனக்கு என்ன பங்கு கிடைத்தது என்றால் எனக்கு பங்கு கிடைக்கப்பெறவில்லை அப்போது நான் கூட்டாக அனுபவம்செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தாவின் பேரில் உள்ள சொத்து ஒரே இடத்தில் உள்ளதா அல்லது வேறு வேறு இடத்தில் உள்ளதா என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. அந்த சொத்துக்கள் எனது அப்பா,சித்தப்பா,பெரியப்பா வாய்மொழியாக பிரித்து அவரவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் அதை மறைத்து நான்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரம் எழுதியது மற்றும் பாகம் செய்தது குறித்து பெரியவர்களிடம் கூறினேனா என்றால் இல்லை எனது அம்மா,

அப்பாவிடம் மட்டும் தான் கூறினேன். எனது அண்ணன்,தம்பிகளிடம் கேட்டேனா என்றால் அவர்கள் பிரித்து தரமுடியாது என்று கூறிவிட்டார்கள். சொத்துகள் யாருடைய நிர்வாகத்தின் கீழ் இருந்தது என்றால் எனது அப்பாவின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தது. 2020 க்கு பின்னர் எனதுபெயரில் எழுதப்பட்ட ஆவணச்சொத்தை நானும், எனது சகோதரர்கள் பெயரில் எழுதப்பட்ட ஆவணச்சொத்தைப்பொறுத்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு என்று எழுதிக்கொடுத்த பாகச்சொத்து தான் எனக்குரியது என்றாலும் அதிகமாக சொத்து கேட்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் பேரில் உள்ள சொத்துக்களை பொறுத்து நான் பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரங்கள் எனது கைவசம் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரங்களைப்பார்த்தால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அதிகமா அல்லது குறைவா என்று தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தில் கிணற்றில் உள்ள பங்கும் கொடுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.காடு குறைவாக கொடுத்துள்ளார்கள்.கிணத்தடி நிலத்தை பொறுத்து எத்தபேருக்கு எழுதிக்கொடுகக்ப்பட்டுள்ளது என்றால் 3 பேருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. கிணத்தடி நிலம் கொடுக்கப்படாத நபர்களுக்கு புஞ்சை நிலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது அதிகமாக கொடுத்துள்ளார்கள். எனது அப்பா ஊர் பொது மக்கள் குடும்ப நபர்களை வைத்து பேசி தான் ஏற்பாடு செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா பேச்சுவார்த்தையின் படி நடநதுகொண்டார் என்றும் நான் அதிகமான ஆதாயம்பெறவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எனது அப்பாபெயரில் எந்த

நிலமும் இல்லை என்றும் அவரின் பெயரில் உள்ள சொத்துக்களை அவரின் பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா அவ்வாறு எழுதிக்கொடுக்கும் போது எனது தந்தையின் வாரீசுகள் அனைவரும் எனது தந்தை மற்றும் தாயிருக்கு ஜீவனாம்சமாக மாதந்தோறும் பணம் கொடுக்க வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி நான் எனது தந்தைக்கு பராமரிப்பு தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல மாதம் ரூ.500/–கொடுத்து வருகிறேன். மாதம் ரூ.500/–பராமரிப்பு கொடுப்பது யார் முன்னிலையில் கொடுத்து வருகிறேன் என்றால் எனது தந்தை கேட்பார் நான் கொடுத்துவிடுவேன் அந்த விவரம் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். எனது தந்தைக்கு நான் மாதந்தோறும் எந்தபராமரிப்பு செலவுக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் அவர் உணவுக்கு திண்டாடி வருகிறார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரும் பாகம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் எனது வழக்குதள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
29.08.2024.